# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

| குடியியற் கல்வி I,II | மூன்றாம் தவணைப் பரீட்சை - 2025 | |
|---|---|---|
| பெயர்/ சுட்டெண் :- ……………………… | தரம் :- 10 | நேரம்:- 3.10 மணித்தியாலம் |

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது மிகப் **பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க

**மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்திக் கொள்க

## குடியியற் கல்வி – I

01 பன்மைப் பண்பாட்டுத் தன்மையை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள "வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தல்" இதை இலக்காகக் கொண்டு செயற்படும் நாடுகள்

(1) இலங்கை, இந்தியா (2) சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து
(3) நேபாளம், சீனா (4) இலங்கை, சிங்கப்பூர்

02 நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் முயற்சியாண்மை போன்ற உற்பத்திக் காரணிகளுக்கான கட்டணம் வரிசையொழுங்கில்

(1) சம்பளம், வட்டி, வாடகை, இலாபம் (2) இலாபம், வாடகை, வட்டி, சம்பளம்
(3) வாடகை, சம்பளம், வட்டி, இலாபம் (4) இலாபம், வாடகை, சம்பளம், வட்டி

03 அரசொன்றின் அடிப்படைப் பண்புகளைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், இறைமை
(2) நிலப்பரப்பு, அரசாங்கம், இறைமை, எதிர்க்கட்சி
(3) சனத்தொகை, இறைமை, நீதித்துறை, அரசாங்கம்
(4) சனத்தொகை, அரசாங்கம், சனாதிபதி, நிறைவேற்று அதிகாரம்

04 மாகாணசபை முறையின் கீழ் மத்திய அரசிற்கும் மாகாணசபைகளுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் பிரதிநிதியாக விளங்குபவர்

(1) ஆளுநர் (2) முதலமைச்சர் (3) பிரதம செயலாளர் (4) மாகாணசபைத் தலைவர்

05 மோதல் ஒன்றைத் தீர்க்கும் போது வெற்றி – வெற்றி தீர்வை பெறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய இலகுவான முறை

(1) மத்தியஸ்தம் வகித்தல் (2) வேண்டுகோள் விடுத்தல்
(3) ஆலோசனைகளை முன்வைத்தல் (4) கலந்துரையாடல் முறை

06 எந்தவொரு வேறுபாடுமின்றி உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு இடமளித்தல் பின்வரும் எப்பெயரால் அழைக்கப்படும்

(1) சட்டம் (2) உரிமை (3) சமத்துவம் (4) சுதந்திரம்

07 பண்டு, பாரிந்த குழுவினர் இலங்கைக்கு வருகை தந்ததன் காரணமாக அமைவது

(1) குடிப்பெயர்வு (2) ஆக்கிரமிப்பு (3) வர்த்தகம் (4) கலாசார நடவடிக்கை

Past Papers Wiki

8 கல்துங்கின் மோதல் பற்றிய மாதிரிக்கமைவாக மனப்பாங்கு என்பதனாற் கருதப்படுவது மோதல் உருவாவதில் தாக்கம் செலுத்தும் தரப்பினரின்

(1) அரசியற் காரணிகள் (2) பண்பாட்டுக் காரணகள்

(3) சமூகவியற் காரணிகள் (4) உளவியற் காரணிகள்

9 அரசின் விருப்பையும் மக்களின் எதிர்பார்ப்பையும் நடைமுறைப்படுத்தும் பிரதிநிதியாகக் கருதப்படுபவர் / கருதப்படுவது

(1) அரசு (2) நீதிமன்றம் (3) பாராளுமன்றம் (4) அரசாங்கம்.

10 அதிகாரப் பரவலாக்கத்தின் போது அவதானிக்கக்கூடிய முக்கிய சிறப்பியல்பாவது

(1) வேற்றுமையில் ஒற்றுமை கட்டியெழுப்புதல்

(2) எழுதப்பட்ட அரசியலமைப்பு காணப்படல்

(3) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை மீளப்பெறக்கூடியதாகயிருத்தல்

(4) அனைத்து தீர்மானங்களும் மத்திய அரசாங்கத்தினால் எடுக்கப்படல்

11 தற்காலத்தில் நேரடி ஜனநாயக ஆட்சி முறையை நடைமுறைப்படுத்தும் போது தோன்றும் பிரச்சினை

(1) அரசில் பல்வேறு கட்சிகள் காணப்படல்

(2) அரசு அதிகளவு சனத்தொகையைக் கொண்டிருத்தல்

(3) உரிய காலத்தில் தேர்தல் நடாத்தப்படாமை

(4) பிரசைகளிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்படல்

12 தனியார் சொத்துடமை மற்றும் இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படும் பொருளாதார முறை

(1) முதலாளித்துவப் பொருளாதாரம் (2) கலப்புப் பொருளாதாரம்

(3) சமவுடமைப் பொருளாதாரம் (4) சந்தைப் பொருளாதாரம்

13 இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்களில் தற்போது பயன்படுத்தும் பிரதிநிதித்துவ முறை எது?

(1) எளிய பெரும்பான்மை (2) விகிதாசார (3) சமாந்தர (4) வட்டாரம்

14 மோதல் தீர்வு முறைகளில் மரபுவழிச் செயற்பாட்டு முறையாகக் குறிப்பிடப்படுவது

(1) உடன்படுதல் (2) இணக்கப்பாடு (3) தீர்ப்புக்கூறல் (4) ஆலோசனையும் வழிகாட்டலும்

15 மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்காக செயற்படுவதுடன் சனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் கட்சி

(1) ஆளும்கட்சி (2) பலகட்சி (3) பொதுக்கட்சி (4) எதிர்க்கட்சி

16 பண்பாடு என்பது அறிவு. வழிபாடுகள், கலைகள், சட்டம், கலாசாரம், பழக்கவழக்கம் மற்றும் சமூகத்தில் வாழ்வதன் மூலம் மனிதர்கள் பெற்றுக் கொள்கின்ற ஏனைய சகல பின்பற்றுதல்கள் ஆற்றல்கள் என்பவற்றின் மொத்த அமைப்பாகும் எனக் கூறியவர்

(1) ரி.பி டெய்லர் (2) சார்லஸ் எல்வூட் (3) உ.கூ.ஹீலர் (4) எ.வீ.டைசி

17 ஐரோப்பாவில் நிலமானியச் சமுதாய அமைப்பு முறை காணப்பட்ட காலப்பகுதி

(1) கி.பி 10– கி.பி 15ம் நூற்றாண்டு (2) கி.பி 5– கி.பி 15ம் நூற்றாண்டு

(3) கி.பி 3– கி.பி 15ம் நூற்றாண்டு (4) கி.பி 1– கி.பி 10ம் நூற்றாண்டு

18 ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு

(1) 1948 டிசம்பர் 10 (2) 1945 டிசம்பர் 10 (3) 1945 நவம்பர் 10 (4) 1948 நவம்பர் 10

19 இலங்கையில் அதிகாரப்பங்கீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களில் 1965இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்

(1) ஜே.ஆர். ஜயவர்த்தன – ராஜீவ் ஒப்பந்தம் (2) டட்லி – செல்வா ஒப்பந்தம்

(3) பண்டா – செல்வா ஒப்பந்தம் (4) ஸ்ரீமா – சாஸ்த்திரி ஒப்பந்தம்

20 சுவிட்சர்லாந்தின் சமஷ்டிப்பேரவை இரட்டை மன்றமாகும் அவை

(1) மத்திய அரசு, மாநில அரசு (2) பிரதிநிதிகள் சபை, செனட்சபை

(3) தேசியசபை, அரசசபை (4) பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள் சபை

21 பிம்ஸ்டெக்(BIMSTEC) அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தொகுதி

(1) ஜப்பான், சீனா, இலங்கை, தாய்லாந்து

(2) பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம்

(3) பங்களாதேஷ், பூட்டான், பாகிஸ்தான், தாய்லாந்து

(4) இந்தியா, நேபாளம், இலங்கை, ஐக்கிய அமெரிக்கா

22 இலங்கையில் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றம் எது?

(1) பிரதேசசபை (2) நகரசபை (3) மாநகரசபை (4) மாகாணசபை

23 பொருளாதாரத்தின் வளங்களை சிக்கனமாக பயன்படுத்தி எதிர்கால சந்ததியினரின் பயன்பாட்டிற்காக ஒப்படைப்பது

(1) சமூக அபிவிருத்தி (2) பொருளாதார அபிவிருத்தி

(3) எதிர்கால அபிவிருத்தி (4) நிலையான அபிவிருத்தி

24 மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசாகும் எனக் குறிப்பிட்டவர்

(1) ஜீ.டி.எச்.கோல் (2) அரிஸ்டோட்டல் (3) ஏ.வீ.டைசி (4) ஹரால்ட் லஸ்கி

25 இலங்கையில் பன்மைப்பண்பாட்டு சமூகம் தோன்றுவதற்குக் காரணமான குடிப்பெயர்வு தொடர்பான காரணி என்பதனுள் **உள்ளடங்காதது**

(1) விஜயனும் அவனது 700 தோழர்களினதும் வருகை

(2) விஜயனின் முடிசூட்டு விழாவுக்காக மதுராபுரி இளவரசி வருகை தந்தமை

(3) எல்லாள மன்னன் வருகை தந்தமை

(4) பத்தகச்சனாவும் சகோதரர்களினதும் வருகை

PAST PAPERS WIKI

26 அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயம் **அல்லாதது**

(1) நாட்டின் பொருளாதார முறைமை

(2) அரசாங்கம் மற்றும் பிரசைகளுக்கிடையிலான தொடர்புகளின் தன்மை

(3) பிரசைகளுக்குரிய அடிப்படை உரிமைகள்

(4) அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்கள்

27 வரலாற்றில் இடம்பெற்ற சிலுவைப்போர் என்பதில் பங்கு பற்றிய மதங்கள்

(1) இந்து - இஸ்லாம் (2) இஸ்லாம் - கிறிஸ்தவம்

(3) கத்தோலிக்கம் - புரட்டஸ்தாந்து (4) பௌத்தம் - இந்து

28 தெற்காசிய பிராந்தியத்தின் வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பு

(1) SAPTA (2) SAARC (3) BIMSTEC (4) OPEC

29 தமது அரசியல், பொருளாதார மற்றும் சமூகத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தனிநபருக்கு சமூகத்தால் பெற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பம் எவ்வாறு அழைக்கப்படும்

(1) உரிமை (2) சமத்துவம் (3) அதிகாரம் (4) சுதந்திரம்

30 தொழிலாளர்களிடையே தொழில் ரீதியான மோதல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனை சனநாயக ரீதியில் தீர்ப்பதற்குப் பயன்படுத்தும் முறை

(1) கலந்துரையாடல் (2) நடுநிலையாளராகத் தலையிடல்
(3) இணக்கப்பாடு (4) பேச்சுவார்த்தையும் பேரம் பேசுதலும்

31 தேசிய அரசு பலமடைவதற்குத் தேவையான சிந்தனைகளை **வழங்காதவர்**

(1) ஜீன்போடின் (2) தோமஸ்ஹொப்ஸ் (3) நிக்கலோ மக்கியவல்லி (4) அரிஸ்டோட்டல்

32 கல்வியின் மூலம் ஆசியாவின் அறிவுக்கேந்திர நிலையமாகுதல் என்னும் இலக்கின் அடிப்படையில் செயற்படும் நாடாக அமைவது

(1) இந்தியா (2) இலங்கை (3) சீனா (4) பாகிஸ்தான்

33 எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருப்பின் அது ஒற்றையாட்சியாகும் எனக் குறிப்பிட்டவர்

(1) பேராசிரியர் ஹர்மன் ஜே.பைனர் (2) பேராசிரியர் ஏ.வீ.டைசீ
(3) பேராசிரியர் சீ.எப்.ஸ்ட்ரோங் (4) கலாநிதி கே.சி.வியர்

34 மத்திய அரசின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக்கும் பொருட்டும் செயற்றிறன்மிக்க மக்கள் சேவையை வழங்கும் பொருட்டும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு பின்ருவனவற்றுள் எது?

(1) பாராளுமன்றம் (2) மாகாணசபை (3) உள்ளூராட்சி மன்றம் (4) பிரதேச செயலகம்

35 இலங்கைக்கு பெருந்தோட்டத்துறைக்காக தென்னிந்தியாவிலிருந்து தமிழர்களை அழைத்து வந்தவர்கள் யார்?

(1) போர்த்துக்கேயர் (2) பிரித்தானியர் (3) ஒல்லாந்தர் (4) பிரான்சியர்

36 இணக்கசபைகளைச் செயற்படுத்தும் அமைச்சு

(1) பாதுகாப்பு அமைச்சு (2) நிதி அமைச்சு (3) உள்நாட்டு அமைச்சு (4) நீதி அமைச்சு

37 சமதர்மப் பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாகக் கொண்டுள்ள நாடுகளுள் உள்ளடங்குவது

(1) ரஸ்யா (2) ருமேனியா (3) பல்கேரியா (4) செக்குடியரசு

38 நல்லாட்சி தொடர்பாக ஒவ்வொருவரினதும் அரசியல் பெறுமானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டிதன் முக்கியத்துவம் என்பதனுள் **அடங்காதது**

(1) தமக்கு விருப்பமான அரசியல் கருத்தைப் பின்பற்றுதல்
(2) முடிவுகளை மேற்கொள்வது தொடர்பில் சுதந்திரமாகச் செயற்படுதல்
(3) சமனற்ற வகையில் வருமானம் பகிரப்படுவதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்
(4) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடாத்துதல்

39 தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வது தொடர்பில் ஏற்படும் ஆசைகளுக்கு வழங்கப்படும் பெயர்

(1) பொருட்கள் (2) சேவைகள் (3) தேவைகள் (4) விருப்பங்கள்

40 பொருளாதாரத்தில் உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தும் நுட்பங்கள்

(1) உற்பத்தி நுட்பம், முதலீட்டு நுட்பம் (2) உற்பத்தி நுட்பம், உழைப்பு நுட்பம்
(3) மூலதன நுட்பம், உழைப்பு நுட்பம் (4) முதலீட்டு நுட்பம், உற்பத்தி நுட்பம்

(40x1= 40 புள்ளிகள்)

Past Papers Wiki

## பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது.
- ஏனைய வினாக்களில் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.
- எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

1. (I) ஜனநாயகம் என்பதற்கு வரைவிலக்கணங்களை முன்வைத்த பிரபல அறிஞர்கள் **இருவரைக்** குறிப்பிடுக?

   (II) ஜனநாயக சமூகமொன்றில் வாழும் பிரசையொருவரினால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளின் **இரு** பிரதான வகைளும் எவை?

   (III) மாகாணசபையொன்றின் ஆளுநரின் அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (IV) எமது நாட்டில் மாகாணசபைகளை அமைப்பதற்கு ஏதுவாக அமைந்த சட்டங்கள் **இரண்டும்** எவை?

   (V) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியை செயற்படுத்துவதனால் அடையக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (VI) உலகமயமாதல் காரணமாக இலங்கை பெற்றுள்ள சாதகமான விடயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (VII) உழைப்பு வழங்கப்படும் முறையின் அடிப்படையில் அவற்றின் **இரு** வகைகளும் எவை?

   (VIII) பன்மைப் பண்பாட்டுச் சமூகமொன்றின் அடிப்படைப் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (IX) மோதல் ஒன்றினைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக?

   (X) மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் **இரண்டு** தருக. (10×2=20 புள்ளிகள்)

2. (I) உலகில் இரு கட்சி முறை பின்பற்றப்படும் நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   (II) நாடொன்று அரசியல் யாப்பிற்கமைவாக செயற்படுவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   (III) (A) ஜனநாயக ஆட்சி வெற்றி பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

   (B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட காரணிகளுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

3 (I) அரசாங்கத்தின் பிரதான வகைகள் **இரண்டும்** எவை? (2 புள்ளிகள்)

   (II) கி.பி 15ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

   (III) (A) அரசின் பிரதான வகைகள் **இரண்டும்** எவை? (2 புள்ளிகள்)

   (B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட வகைளுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

4 (I) ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்துறையில் உள்ளடங்கியுள்ள **இரு** சபைகளும் எவை? (2 புள்ளிகள்)

   (II) நாடொன்றில் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

   (III) (A) இலங்கையில் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள பட்டியல்களுள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

   (B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட பட்டியல் ஒன்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

Past Papers WiKi

5 (I) பண்பாட்டின் கூறுகளுள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

(II) நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

(III) (A) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட நடைமைகளுள் **ஒன்றினை** விளக்குக.(3 புள்ளிகள்)

6 I) சமதர்மப் பொருளாதாரமொன்றில் அவதானிக்கக்கூடிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

II) இலங்கையில் காணப்படும் சந்தைப்பொருளாதாரத்தின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

III) (A) பொருளாதாரமொன்றில் இடம்பெறும் அடிப்படைச் செயற்பாடுகளுள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட செயற்பாடுகளுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

7 (I) மோதல் தீர்வு தொடர்பாக பிரசை ஒருவரிடம் காணப்பட வேண்டிய தனிநபர் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) மோதல் தீர்வில் ஈடுபடும் நடுநிலையாளர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(III) (A) மோதலின் பிரதான வகைகள் **இரண்டும்** எவை? (2 புள்ளிகள்)

(B) மேலே (A) வினாவில் குறிப்பிட்ட வகைகளுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library